



Signature Not Verified
Signed by Assistant Director
Location:Tiruppur
Date:2023.12.20 14:38:11

# நகர் ஊரமைப்புத்துறை (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

மடத்துக்குளம் பேரூராட்சி

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மடத்துக்குளம் பேரூராட்சி, அக்ரஹார கண்ணாடிப்புத்தூர் கிராமம், க.ச.எண் : 395/C - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1 : 500

இணையவழி விண்ணப்ப எண் : KDRUFID7 நாள் : 09-10-2023

வ

குறிப்பு :

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : 1.89 ஏக்கர் (அ) 7650.00 ச.மீ | |
| ஒதுக்கிய மனைகள் | : 33 | |
| மனைப்பிரிவின் எல்லை | ....................... | |
| நிலையிலுள்ள சாலை | ....................... | |

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

I) மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 2585.76 ச.மீ

II) பூங்கா

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு) x 10%
(7650.00 ச.மீ - 2585.76 ச.மீ) x 10% = 506.42 ச.மீ (10.00%)

ii) TNCDBR - 2019 விதி 47(6) - ன் படி பூங்கா (OSR 10%) பரப்பு 506.42 ச.மீ - க்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பு தொகை ரூ. 91,155/- நாள் : 30.11.2023 -அன்று மனுதாரரால் உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

பொது உபயோகம்

A) LOCAL BODY க்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பரப்பு — (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு x (0.5/100)
(7650.00 ச.மீ - 2585.76 ச.மீ) x 0.5/100 = 25.32 ச.மீ
ஒப்படைக்கப்பட பரப்பு = 34.88 ச.மீ - (0.69%)

B) TANGEDCO க்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பரப்பு — (மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு x (0.5/100)
(7650.00 ச.மீ - 2585.76 ச.மீ) x 0.5/100 = 25.32 ச.மீ
ஒப்படைக்கப்பட பரப்பு = 35.60 ச.மீ - (0.70%)

கட்டிட வரம்பு:
9.0மீ சாலைகளுக்கு 1.50மீ விடப்படல் வேண்டும்.
9.0மீ - 18.0மீ வரையுள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்.

மூலை முடுக்கு:
12.0மீ வரை சாலைகளுக்கு 1.5 மீ x 1.5 மீ விடப்படல் வேண்டும்.
12.0மீ - க்கு மேல் உள்ள சாலைகளுக்கு 4.5 மீ x 4.5 மீ விடப்படல் வேண்டும்.

## நிபந்தனைகள் :

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 31.01.2020 படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் : 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 09.12.2020 மற்றும் அரசாணை எண் : 141 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 16.07.2022 - ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலைத் தொட்டி, தெருவிளக்கு வசதிகள், ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் செயல் அலுவலர், மடத்துக்குளம் பேரூராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.
4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட் ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் இரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6 X 1.2 மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப் படவேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார்சாலை அமைக்கப்பட்டு உள்ளாட்சி பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO : 336 / 2023

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்